**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை: திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு, 2053, ஸ்ரீ சுபகிருது வருடம், மார்கழி மாதம் 5 -ம் நாள்**
**இ.ம.எண். 7/2022 இன் மு.வ.எண்.16/2020**

மோகன்

... மனுதாரர்/வாதி

... எதிர் ...

1. ஈஸ்வரன்
2. பிச்சையம்மாள் ---- எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 08.12.2022 அன்று என்முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த போது, மனுதாரர்/வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.என்.ஆர்.சரஸ்வதி அவர்கள் ஆஜராகியும், அசல்வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி ஒருதரப்பாக்கப்பட்ட நிலையிலும், 2ம் எதிர்மனுதாரர்/ 2ம்பிரதிவாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.எஸ்.சுப்பராயன், திருமதி.எம்.ரோகினி ஆகியோர்கள் ஆஜராகியும், இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

திருப்பாச்சேத்தி தெற்கு குரூப், கிராம நிர்வாக அலுவலர், நத்தம் புல எண்: 76/13, 76/14 ஆகியவற்றின் தூய அடங்கல், சிட்டா, புலப்படம் ஆகியவற்றின் அசல் பதிவேடு மற்றும் சான்றிட்ட ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராகி ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க ஏதுவாக அவருக்கு சம்மன் அனுப்பிட அனுமதி வேண்டி மனுதாராரர்களால் மனு தாக்கல்.

**1. மனு அபிடவிட்டின் சுருக்கம்:-**

அ) அசல்வழக்கு வாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. தாவாசொத்தான நத்தம் புல எண்.76/13 மற்றும் 76/14 க்கு வருவாய்துறை ஆவணங்களில், பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதாக பொய்யாக கூறி வருவதால், அதை நிரூபணம் செய்ய திருப்பாச்சேத்தி தெற்கு குரூப், கிராம நிர்வாக அலுவலர், நத்தம் புல எண்: 76/13, 76/14 ஆகியவற்றின் தூய அடங்கல், சிட்டா, புலப்படம் ஆகியவற்றின் அசல் பதிவேடு மற்றும் சான்றிட்ட ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராகி ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க ஏதுவாக அவருக்கு சம்மன் அனுப்பிட அனுமதி வேண்டி மனுதாராரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2022.12.20 15:30:25 +0530

**2. 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:**

அ) மனு ஆட்சேபிக்கப்படுகிறது. தாவாசொத்தான நத்தம் புல எண்.76/13 மற்றும் 76/14 க்கு வருவாய்துறை ஆவணங்களில், பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதாக பொய்யாக கூறி வருவதால், அதை நிரூபணம் செய்ய மனுதாரார்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகக் கூறுவது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல. மனுதாரர் தரப்பில் மனு செய்து நகல்களை பெறுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், இம்மனு தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.** இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா? இல்லையா? என்பதே ஆகும்.

**4.** மனுதாரர்கள்தரப்பில் மேற்படி மனுவில் கோரியுள்ள தாவாசொத்தான நத்தம் புல எண்.76/13 மற்றும் 76/14 க்குரிய வருவாய்துறை ஆவணங்கள் மிக அவசியம் என்றும் மனுவை அனுமதிக்கக் கோரி வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் தரப்பில் மனு செய்து நகல்களை பெறுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், இம்மனு தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் கோரி வாதிடப்பட்டது.

**5.** அசல்வழக்கில் வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.19 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வாதி தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்து வந்துள்ள நிலையில், மேற்படி ஆவணங்கள் வாதிதரப்பு வழக்கிற்கு அவசியம் என்ற நிலையில், நகல்மனு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**6.** மனுதாரர்கள் தரப்பில் நகல் கோரி மனு தாக்கல் செய்து, அம்மனு வருவாய் துறையினரால் நிராகரிக்கப்படும் பட்சத்திலோ, வருவாய் துறையினரால் மனுவில் உள்ள ஆவணங்கள் வழங்க மறுக்கப்படும் பட்சத்திலோ தான், நீதிமன்றத்தை அணுகி மேற்படி வருவாய் துறையினரை நீதிமன்றம் மூலம் சம்மன் செய்து ஆவணங்களை வரவழைக்கக் கோர இயலும் என உரிமையியல் நடைமுறை விதி 75ல் சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர்தரப்பில் ஆவணங்கள் கோரி நகல்மனுவே தாக்கல் செய்யாத நிலையில், இம்மனுவானது உரிமையியல் நடைமுறை விதி 75 ன் கீழான அடிப்படை நடைமுறைகளை பின்பற்றவில்லை என்பதால் இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்று நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக, மனுதாரர்கள் மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2022.12.20 15:30:41 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2022-ம் ஆண்டு டிசம்பர் 20-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2022.12.20 15:30:52 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், திருப்புவனம்.**

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை.

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை.

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2022.12.20 15:30:59 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், திருப்புவனம்.**